# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 31.03.2020**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1024** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான மார்ச் 2020 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1025** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் மார்ச் 2020ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1026** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

**பொருள் எண்.4**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 சுந்தர விநாயகர் நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட சாலையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க இடையூறாக இருந்த 5 மின்கம்பங்களை அகற்றி வேறு இடத்திற்கு மாற்றியமைக்குமாறு மின்சாரத்தின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து, மேற்கண்ட மின்கம்பங்களை மாற்றியமைக்க உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், திருவேற்காடு பிரிவு அவர்களிடமிந்து வரப்பெற்ற கேட்பு தொகை ரூ.25,210/—ஐ செலுத்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகையினை பொது நிதியின் கீழ் செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1027** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்படுகிறது (அ) மற்றும் (ஆ).**

---

## பொருள் எண்.5

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 மாதிராவேடு பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2018–19ன் கீழ் பணியினை மேற்கொள்ள 26.02.2020 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | மாதிராவேடு பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைத்தல். | 23.00 | M/s.Ramalakshmi Enterprises<br>M/s.L.N.Dreamway Construction | 4.96 % மதிப்பீட்டை விட அதிகம்<br>6.97 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L1 ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்ததை தொடர்ந்து, நகராட்சி மூலம் விலைகுறைப்பு செய்து தர கோரியதில் ஒப்பந்ததாரர் தற்போதைய கட்டுமான பொருட்களின் சந்தை விலை, இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்களின் உள்ளூர் தினக்கூலி ஆகியவை அதிகமாக உள்ள காரணத்தால் விலைக்குறைவு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

அ) மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியுள்ளதாலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த L1 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.2.7.2.ன்படி நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டு மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளுக்கு மதிப்பீட்டு தொகை விட கூடுதலாகும் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1028** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.6

இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் ஆணையாளர் அறை, நகராட்சி பொறியாளர் அறை, பொது பிரிவு அறை, பொறியியல் பிரிவு அறை, நகரமைப்பு பிரிவு அறை, வருவாய் பிரிவு அறை, பொது சுகாதார பிரிவு அறை, கணினி அறை மற்றும் வரிவசூல் மைய அறைகளில் குளிர்சாதன வசதி (Air Conditioner) அமைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மேற்கண்ட குளிர்சாதன வசதிகள் மின்சார பாதிப்புகளால் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது. மேலும், தற்போது கோடை காலங்கள் தொடங்கப்பட்ட நிலையில் மேற்கண்ட குளிர்சாதனத்தினை பழுது பார்த்து பராமரிப்பு பணி மேற்கொள்ள தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. M/s.Sobi Air System,<br>Shop No.3, Door No.14/104,<br>New Street, Karkku Main Road,<br>Ambattur, Chennai-53. | குறைவு |
| 2. M/s.Chill Pad,<br>No.84, Vasantham Colony,<br>Anna Nagar, Chennai – 40. | அதிகம் |
| 3. M/s.KK Aircon,<br>No.793, MTH Road,<br>Padi, Chennai. | அதிகம் |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட பணியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s.Sobi Air System அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி, பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணி தொடர்ந்தமைக்கும் மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1029** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட கணினிபொறி மற்றும் அதன் சம்மந்தமான தளவாட பொருட்கள் சப்ளை செய்யும் பணியினை மேற்கொள்ள 17.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பயன்பாட்டிற்கு தேவையான கணினி, மானிடர் மற்றும் இதர தளவாடங்கள் சப்ளை செய்தல். | 2.15 | 1.M/s.THUKKARAM COMPUTERS<br>2.M/s.KANISH SYSTEM | 1.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.41 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1030** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 18.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி பகுதிகளில் உள்ள குடிநீர்குழாய்கள் மற்றும் பொதுக்குழாய்களை ஒரு வருட காலத்திற்கு பழுதுபார்த்து பராமரிக்கும் பணி மேற்கொள்ளுதல். | 20.00 | V.மகேந்திரமணி<br>J.இளங்கோ | குறைவு<br>அதிகம் |
| 2. | நகராட்சி பகுதிகளில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை ஒரு வருட காலத்திற்கு பழுதுபார்த்து பராமரிக்கும் பணி மேற்கொள்ளுதல். | 15.00 | G.விஜயகுமார்<br>M/s.குமரேசன் கான்ட்ராக்டர் | குறைவு<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1031** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட நிதி (ICDS Fund) 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 17.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கீழ்அயனம்பாக்கம் இந்திரா நகர் அங்கள்வாடி மையத்தில் தரைக்கு டைல்ஸ் பதித்தல், சுவருக்கு கலர் வண்ணம் அடித்தல், அரைக் கதவு (Half Door) அமைத்தல், மின்விசிறி மற்றும் டியூப் லைட் அமைத்தல். | 2.00 | P. ரகு<br>J.இளங்கோ | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.77 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்கண்ட பணிக்கு கூடுலாகும் செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1032** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.10

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 13.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கீழ்அயனம்பாக்கம் யாகவ மங்கள் ராஜ் தெருவில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் மற்றும் கீழ்அயனம்பாக்கம் யாகவ மங்கள் ராஜ் தெரு, இந்திரா காந்தி தெரு, அணுகு சாலை மற்றும் மாந்தோப்பு சாலையில் குடிநீர் குழாய் அமைத்தல். | 6.00 | N. செல்வராஜ்<br>V.பார்த்திபன் | 0.22 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.19 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | கீழ்அயனம்பாக்கம் பகுதியிலுள்ள பொது கிணற்றில் 500 LPH லிட்டர் கொள்ளளவு கொண்ட RO Plant வசதிகள் அமைத்தல். | 6.50 | M/s.Ozone Techonlogies<br><br>M/s.Hi Tech Sweet Water | 0.18 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.11 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | மாதிராவேடு மாரியம்மன் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் பின்புறம், காவேரி நகர், சண்முகா நகர், காமராஜ் 2வது குறுக்கு தெரு மற்றும் வேலப்பன் நகர் பகுதியில் குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்தல். | 1.50 | M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br><br>G.விஜயகுமார் | 0.43 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.07 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | இந்நகராட்சிக்கு புதியதாக அமைக்கப்பட்டுள்ள அலுவலக கட்டடத்தில் கூடுதல் பணி மேற்கொள்ளுதல். | 9.70 | J.வெங்கடேசன்<br><br>J.இளங்கோ | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.46 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளை அலசி சுத்தம் செய்தல். | 9.00 | M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br><br>G.விஜயகுமார் | 0.26 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.31 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்தல் மற்றும் பிரதான குழாய் பகுதியில் இணைப்பு வசதி செய்தல். | 3.20 | M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br><br>G.விஜயகுமார் | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.84 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1033 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.11</u>

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அம்மன் நகர் குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 3.00 | N. செல்வராஜ்<br><br>V.பார்த்திபன் | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.52 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | அம்மன் நகர் 2வது தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 8.40 | N. செல்வராஜ்<br><br>V.பார்த்திபன் | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.52 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | மேல்அயனம்பாக்கம் ராம் பூர்னா நகர் பகுதிக்கு தார்தளம் அமைத்தல். | 10.00 | K.R.வடிவேல்<br><br>P.சந்திரன் | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.54 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | நூம்பல் சூசை நகர் பிரதான சாலைக்கு 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 9.80 | M/s.லட்சுமி எண்டர்பிாரைசஸ்<br><br>M/s.சன்வியூ எண்டர்பிாரைசஸ் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>2.37 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | நூம்பல் சூசை நகர் எம்.ஜி.ஆர் சாலைக்கு 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 8.60 | M/s.லட்சுமி எண்டர்பிாரைசஸ்<br><br>M/s.சன்வியூ எண்டர்பிாரைசஸ் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>2.37 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | நூம்பல் சூசை நகர் பூங்கா தெருவிற்கு 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 3.30 | M/s.லட்சுமி எண்டர்பிாரைசஸ்<br>M/s.சன்வியூ எண்டர்பிாரைசஸ் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.37 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1034** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | 1வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 | G.விஜயகுமார்<br><br>S.நித்தியானந்தம் | 0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.27 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 2வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 9.10 | M/s.இராமலட்சுமி எண்டர்பிாரைசஸ்<br><br>S.நித்தியானந்தம் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.02 % மதிப்பீட்டை விட குறைவு |
| 3. | 3வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 | G.விஜயகுமார்<br><br>M/s.குமரேசன் கான்ட்ராக்டர் | 0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.27 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | 5வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.90 | N. செல்வராஜ்<br><br>V.பார்த்திபன் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>6.22 % மதிப்பீட்டை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விட அதிகம் |
| 5. | 6வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 | G.மதிவேலன்<br>K.அருண்குமார் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.85 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | 7வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.90 | M/s.எம்.ஆர். கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>M/s.S.P பில்டர்ஸ் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>6.72 % மதிப்பீட்டை விட குறைவு |
| 7. | 11வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 | M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br>G.விஜயகுமார் | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.39 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | 14வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 | M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br>G.விஜயகுமார் | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.39 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 9. | 15வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.90 | M/s.R.R பில்டர்ஸ்<br>M/s.வனஜா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.17 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.81 % மதிப்பீட்டை விட குறைவு |
| 10. | 16வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 | V.மகேந்திரமணி<br>J.இளங்கோ | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>5.40 % மதிப்பீட்டை விட குறைவு |
| 11. | 17வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 | V.அசோகன்<br>S.நித்தியானந்தம் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>6.72 % மதிப்பீட்டை விட குறைவு |
| 12. | 18வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 | M/s.ராஜம் பில்டர்ஸ்<br>V.பார்த்திபன் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.81 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 13. | திருவேற்காடு நகராட்சிக்கு புதியதாக 5HP திறன் கொண்ட மின்மோட்டார்கள் மற்றும் மின் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல். | 5.30 | M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br>G.விஜயகுமார் | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.17 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 14. | மேல்அயனம்பாக்கம் எட்டீஸ்வரன் கோயில் தெரு மற்றும் ராஜீவ் காந்தி தெருவிற்கு ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.10 | N. செல்வராஜ்<br>V.பார்த்திபன் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>6.17 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1035** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண்.13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கீழ்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும் அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சொக்கலிங்கம் நகர், ராஜீவ் நகர் 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, செட்டியார் நகர் பிரதான சாலை, ராஜீவ் நகர் எம்.ஜி.ஆர் தெரு, ராஜீவ் நகர் காந்தி தெரு, வெள்ளாளர் தெரு, ராஜீவ் நகர் 3வது பிரதான சாலை, லட்சுமி காந்தம்மாள் தெரு, தெருவீதியம்மன் கோயில் தெரு, கோவிந்தராஜ் தெரு, தேவி கருமாரியம்மன் நகர் மற்றும் முருகன் நகர் பகுதிகளுக்கு குடிநீர் குழாய் அமைத்தல். | 9.90 |
| 2. | கற்பகாம்பாள் நகர் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வாகன நிறுத்தம் வசதி மேற்கொள்ளுதல். | 9.90 |
| 3. | திருவேற்காடு நகராட்சி பகுதியில் விடுப்பட்ட இடங்களில் குடிநீர் குழாய் அமைத்தல். | 2.00 |
| 4. | காயத்திரி நகர் பூங்காவினை சுத்தம் செய்து, பழுது பார்த்து வண்ணம் பூசி பூங்காவினை புதுப்பித்தல். | 2.00 |
| 5. | எஸ் (அன்) பி குடியிருப்பு மற்றும் பெருமாளகரம் பகுதியில் அமைந்துள்ள பொது கிணற்றில் மின்மோட்டர் பொருத்துதல். | 2.00 |
| 6. | அம்பத்தூர் வானகரம் பிரதான சாலையில் (மாந்தோப்பு சாலை சந்திப்பு அருகில்) மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 25.00 |
| 7. | அம்பத்தூர் வானகரம் பிரதான சாலையில் (கீழ்அயனம்பாக்கம் பகுதி) மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 6.50 |
| 8. | அம்பத்தூர் வானகரம் பிரதான சாலையில் (கீசன் நகர் எதிரில்) மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 8.70 |
| 9. | செட்டி தெரு, திருவள்ளுவர் தெரு, தினேஷ் நகர், மாசிலாமணி நகர், செந்தில் நகர், ஸ்ரீராம் தெரு மற்றும் நியூ சென்சூரியன் நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் குழாய் அமைத்தல். | 3.00 |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1036** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.14

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களுக்கும், பொதுமக்கள் செல்லும் பகுதிகளில் கிருமி நாசினி பயன்படுத்தி தெருக்களில் தெளிக்க ஏதுவாக 6.50 HP பெட்ரோல் இன்ஜின் மற்றும் உதிரி பாகங்கள் புதியதாக சப்ளை வாங்கி பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

அ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1037** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.15</u>**

திருவேற்காடு நகராட்சி பொதுநிதி 2020–21–ன் கீழ் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நகராட்சி அலுவலகத்தில் வந்து செல்லும் பொதுமக்களுக்கு வளாகத்தின் நுழைவாயில் பகுதியில் பொதுமக்கள் கை அலம்பி செல்ல (Wash Basin) தேவையான வசதி ஏற்படுத்திக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.10000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

அ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1038 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.16</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் Revolving Fund திட்ட நிதியின் கீழ் முதற்கட்டமாக 9000 குடியிருப்புகளுக்கு வீட்டு குடிநீர் இணைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து, மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தெருக்களில் உள்ள வீடுகளில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகளை அகற்றுவதற்கு தேவையான ஆட்கள் இந்நகராட்சியில் இல்லாததால், ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

அ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1039 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.17</u>**

திருவேற்காடு நகராட்சி சொந்தமான பேரூந்து நிலையம் அருகில் அம்மா உணவக கட்டிடம் இயங்கி வருகிறது. மேற்கண்ட கட்டிடம் மற்றும் மின்சாதன பொருட்கள் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், மேற்படி பழுதுகளை சரிசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

அ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1040 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.18</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களுக்கும், பொதுமக்கள் செல்லும் பகுதிகளில் கிருமி நாசினி தெளிப்பானுக்கு தேவையான மின்மோட்டாருடன் இணைக்க ஜனரேட்டர் வாடகை அடிப்படையில் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

அ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1041** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.19

திருவேற்காடு நகராட்சி அலுவலகம் தற்போது தற்காலிகமாக வாடகை அடிப்படை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையில் அலுவலக கட்டிடத்தில் பல்வேறு பிரிவுகளில் கணினிகளுக்கு Internet (or) Networking Connection வசதி முறையாக இல்லாததால் அதற்கான வசதிகளை ஏற்படுத்திடவும், மேலும், அடிக்கடி மின்சார பழுதுகள் ஏற்படுவதாலும் கணினி மற்றும் பிரின்டர்கள் மின்சாரத்தினால் பழுது ஏற்படுவதால் அதனை சரிசெய்யும் பொருட்டு அதற்கான UPS வாங்கி கொள்ளவும் அதற்காக ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் |
|---|---|
| 1. | Internet (or) Networking Connection வசதி |
| 2. | UPS |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

அ) மேற்கண்ட பணியின் அவசியத்தினை கருதி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1042** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.20

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், 144 ஊரடங்கு உத்திரவு அறிவிக்கப்பட்டதன் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் வழிகாட்டுதலின்படி 18 வார்டுகளில் உள்ள அனைத்து முக்கிய பிரதான சாலைகள், நகர்புறங்களில் உள்ள தெருக்கள், சாலை சந்திப்புகள் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் சுற்றிவதையும் வாகனங்களை வெளி வருவதை தடுக்கும் வகையில் சவுக்கு மரம் மற்றும் அலுமினியம் தகடுகளை கொண்டு தடுப்பு (Barricade) அமைக்கும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

அ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1043** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.21

திருவேற்காடு நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் சுகாதார பிரிவு ஒப்பந்ததாரர்கள் அவரவர்கள் செய்யும் பணிகளில் பிடித்தம் செய்யப்படும் (GST) சரக்கு மற்றும் சேவை வரிகள், வருமான வரிகள் மற்றும் இதர வரியினங்களை அரசிற்கு செலுத்துவதற்கு தேவையான அறிக்கைகள் தயாரித்து, அரசு தலைப்பு கணக்கில் செலுத்தியது தொடர்பான பணிகளை அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி SRI HARI CONSULTANT நிறுவனத்தின் மூலம் மேற்படி பணியினை மேற்கொண்டதற்கும், எதிர் வரும் காலங்களில் தொடர்ந்து மேற்படி நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ளவும், இதற்கான சேவை கட்டணத்தினை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1049/2020/சி1)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1044** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.22</u>**

திருவேற்காடு நகராட்சியில் 2019–2020 ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் ஆய்வு செய்யப்படவேண்டியுள்ளது. இதனை மேற்கொண்டு இந்நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு ஒப்படைக்க ஏதுவாக அனைத்து ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை புள்ளி விவரப் பணிகள் கணினி பதிவேற்றம் செய்து அறிக்கை தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள உள்ளூர் கணினி நிறுவனத்திடம் ஒப்படைத்து மேற்படி, பணிகளை மேற்கொள்ளவும், இதற்கான ஒப்பந்த/விலைப்புள்ளி பெறவும் இச்செலவினங்களை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1049/2020/சி1)

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1045** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.23</u>**

இந்நகராட்சியில் 2019–2020–ஆம் ஆண்டிற்கான கணக்குகளை உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு ஒப்படைக்க அனைத்து ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை புள்ளி விவர பணிகள் கணினியில் பதிவேற்றம் செய்து அறிக்கை தயாரிக்கும் பணியினை மேற்கொள்ள உள்ளூர் கணினி நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு</u>**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | **M/s.Gursor Solution,**<br>Elliamman Koil Street, Adayar, Chennai | 122500/– |
| 2. | **M/s.JB Soft Systems**<br>East Jones Road, Saidapet Chennai | 121500/– |
| 3. | **M/s.G-soft System**<br>Jothi Nagar Main Road,<br>Ekkattuthangal, Chennai | 120000/– |

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3ல் கண்டுள்ள M/s.G-soft System நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாகவுள்ளதால் இதனை ஏற்கலாம். அவசர அவசியம் கருதி உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு ஆண்டு கணக்கினை சமர்பிக்க குறைந்த விலைப்புள்ளி கொடுத்துக் கொண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும், பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1049/2020/சி1)

**அலுவலக குறிப்பு:** அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1046** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.24</u>**

இந்நகராட்சியில் சொத்துவரி கேட்பு அறிவிப்புகளை கேட்புதாரர்களுக்கு உடனடியாக சார்பு செய்து வரி வசூல் செய்ய ஏதுவாக இவ்வலுவலகத்தில் ஜெராக்ஸ் இயந்திரம் வசதி இல்லாத காரணத்தினால் வெளி நிறுவனத்தில் ஜெராக்ஸ் எடுத்தமைக்கும், மற்றும் உள்ளாட்சி தேர்தல் வாக்குசாவடி வரைபடங்கள், மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் படி நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்கு கர்நாடகா மாநிலம் மாண்டிய நகரம் சென்று Balut Unit கொண்டு வரப்பட்டதற்கான செலவினங்கள் மற்றும் பாதாள சாக்கடை செயலாக்கம் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் தயார் செய்வதற்கும், செலவினங்கள் மேற்கொண்டமைக்கும்,

இதற்கான தோராய செலவினம் ரூ.1,00,000/–க்கு (ஒரு லட்சத்திற்கு) பொதுநிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.913/2019/சி1)

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1047** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.25</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அயனம்பாக்கம் கிராமம், சர்வே எண்.91/1A2B, 1B,2B, 91/3B 3630 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி திரு.K.புகழேந்தி மற்றும் A.வசந்தி (GPA) என்பவர்கள் உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்பித்ததில், மனுதாரரின் மனுவினை பரிசீலனை செய்து உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களால் கடிதம் எண்.L1/1380/2019 நாள்.08.07.2019ல் சாலைகள் இடத்தினை தானமாக ஒப்படைக்க சாலையமைப்பு வரைபடம் ஒப்புதல் செய்து நகராட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மனுதாரர் அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கண்ட சாலையமைப்பு வரைபடத்தின்படி 805 சதுர மீட்டர் இடம் சாலைக்கு தானமாக நகராட்சிக்கு பத்திரப்பதிவு எண்.14367 நாள்.01.10.2019ல் பதிவு செய்து தானபத்திரம் சமர்ப்பித்துள்ளார்.

இதன் அடிப்படையில் உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்கள் கடிதம் எண்.L1/1380/2019 நாள்.21.10.2019ல் மனுதாரரின் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு PPD/LO.No.112/2019 மற்றும் திட்ட அனுமதி எண்.12734 என எண்ணிட்டப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் திரு.K.புகழேந்தி மற்றும் A.வசந்தி (GPA) என்பவர்களுக்கு மேற்படி இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு இறுதி ஒப்புதல் இந்நகராட்சியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ) மனுதாரர் மனைப்பிரிவில் தார்சாலை வசதி, மின்விளக்குகள் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், மழைநீர் கால்வாய் மற்றும் குடிநீர் வசதிக்காக ரூ.3.90 இலட்சங்கள் செலுத்த வேண்டுமென மதிப்பீடு தயார் செய்து பொறியியல் பிரிவில் குறிப்பு கொடுத்துள்ளதன் அடிப்படையில், மனுதாரர் ரூ.3.90 இலட்சங்களை இந்நகராட்சியில் செலான் எண்.015/01/1/19–20/0004818, நாள்.17.09.2019ல் செலுத்தி அதற்கான ரசீது சமர்பித்துள்ளார்.

ஆ) மனுதாரர்கள் திரு.K.புகழேந்தி மற்றும் A.வசந்தி (GPA) மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகளை தானப்பத்திரம் பதிவு எண்.14367 நாள்.01.10.2019ல் பதிவு செய்து தானப்பத்திரம் சமர்பித்துள்ளார்.

இ) மனுதாரர்கள் மனைப்பிரிவு கட்டணம் ரூ.2,00,000/–ஐ செலான் எண்.0009262 நாள்.27.02.2020, மதில் சுவர் கட்டணம் ரூ.6000/– செலான் எண்.9263 நாள்.27.02.2020, காலிமனை வரி கட்டணம் ரூ.1,26,256/– செலான் எண்.0004085, நாள்.29.11.2019ல் செலுத்தி அதற்கான ரசீது நகல் சமர்பித்துள்ளார்.

ஈ) மனுதாரரின் மேற்கண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு 3630 சதுர மீட்டர் பரப்பளவு மனையிடத்தில் 20 குடியிருப்பு மனைகள் அமைக்க உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களால் கடிதம் எண்.L1/1380/2019 நாள்.08.07.2019ல் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு PPD/LO.No.112/2019 மற்றும் திட்ட அனுமதி எண்.12734 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட காரணத்தின் அடிப்படையிலும் மற்றும் உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் மேற்கண்ட தொழில்நுட்ப ஒப்புதலின் அடிப்படையிலும், மனுதாரரின் மேற்கண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க இறுதி ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3376/2019/எப்1)

**நகர்மன்ற தீர்மான எண்.1048** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.26

இந்நகராட்சி சொந்தமான பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் TATA ACE வாகனங்களுக்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் **29.03.2020** உடன் முடிவடைவதால் அடுத்த ஒரு வருட காலத்திற்கு **30.03.2020** முதல் **29.03.2021** வரை வாகன காப்பீடு கட்டணம் பின்வரும் வாகனங்களுக்கு The New India Assurance Company Limited நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**வாகனங்களின் விவரம்.**

| வ. எண் | வாகனம் எண் | தேதி | தொகை |
|---|---|---|---|
| 1. | TN 12 V 7750 | 29.3.2020 | ரூ.53,764/– |
| 2. | TN 12 U 9482 | 29.3.2020 | ரூ. 53,764/– |
| 3. | TN 12 V 7716 | 29.3.2020 | ரூ. 59,545/– |
| 4. | TN 12 V 7786 | 29.3.2020 | ரூ. 39,925/– |
| **நிகரத்தொகை** | | | **ரூ. 2,06,998/–** |

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1049 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.27

திருவேற்காடு நகராட்சியில் உள்ள பொது மக்களுக்கு குப்பைகளை பிரித்து வழங்ககூடிய அளவில் ஏற்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி (IEC Activities) பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பள்ளி மாணவர்களிடயே இப்பொருள் குறித்து போட்டிகள் நடத்தவும், பொது மக்கள் கூடும் இடங்கள் மற்றும் முக்கிய சாலைகள் விழிப்புணர்வு பதாகைகள் வைப்பது, பொது மக்கள் குப்பைகள் கொட்டும் இடங்களில் அசுத்தம் செய்யாமல் இருக்க வண்ண கோலங்கள் போடுவதும், முக்கிய இடங்களில் டிஜிட்டல் ஸ்கோர் ரோலிங் போர்டு அமைத்தல், ஒவ்வொரு வீடுகளியலும் ஸ்டிக்கர்கள் ஒட்டுதல், கேபில் டி.வி நிறவனத்தின் மூலம் விளம்பரம் செய்தல், திறந்த வாகனத்தில் ஒளி ஒலி பிரச்சாராம் செய்தல், நாடகம் நடத்துல், போன்ற பொது சுகாதார பணிகளின் செயல்பாடுகளை பொது மக்களிடைய சிறப்பான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்த தனியார் நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவீனத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1050 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.28

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும், மற்றும் பேருந்து நிலையம் சமுதாய கூடங்கள், வணிக வளாங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்தவும் நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் அறிவுரைகளின்படி பிளிச்சிங் பவுடர் என்னும் கிருமி நாசினி போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும்

மாவட்ட நகராட்சிகள் சட்டம் – 1920 பிரிவு 15 – ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் 6000 கிலோ பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பதிவு செய்யவும் மற்றும் தகவலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.961/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1051 நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.29

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளை உள்ளடக்கிய சென்னை மாநகராட்சி ஒட்டி உள்ள நகராட்சியாகும், இங்கு 22,291 குடியிருப்புகள் அமைந்துள்ளன நகராட்சி பகுதிகளில் இரு வேலைகளிலும் கொசுப்புகை மருந்து அடிக்கப்பட்டு வரப்படுகிறது. நகராட்சியில் 2 Mega Fogging Machine-கள், 2 pulse fogging Machine மற்றும் 10-Mini Fogging Machine–கள் உள்ளது. இரவு நேரங்களில் வாகனத்துடன் கூடிய Mega Fogging இயந்திரங்கள் உபயோகப் படுத்தப்பட்டு வரப்படுகிறது. தற்போது மேற்குறிப்பிட்ட Mega Fogging இயந்திரங்களில் பழுது ஏற்பட்டுள்ளது. மேற்படி புகைப்போக்கி இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.20,000/– செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மேலும் அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்று பதிவு செய்யவும் தகவலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1052 நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.30

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் 9 இலகுரக வாகனங்களும், 33 பேட்டரியால் இயங்க கூடிய வாகனங்களும் (BOV) வீடுவீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேலும் ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோவில் உள்ளதால் வெளியூர்களியிருந்தும், பல மாநிலங்களிலிருந்து விழா காலங்களில் ஆயிரகணக்கில் வந்தவண்ணம் உள்ளனர். மேலும் சென்னை பெருநகர மாநகராட்சியை ஒட்டி உள்ளதால் பல்வேறு குடியிருப்பு நகர்கள் உருவாகியுள்ளதாலும். வாகனங்கள் பொது சுகாதார பணிக்கு போதுமானதாக இல்லாதால் கூடுதலாக 5 பேட்டரியால் இயங்க கூடிய வாகனங்கள் (BOV) சப்ளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | CY Group of Company<br>42, அய்யப்பா செட்டி தெரு | பொது சுகாதாரம் நகராட்சி பகுதியில் குப்பைகள் சேகரம் செய்வதற்கு கூடுதலாக 5 பேட்டரியால் இயங்க கூடிய வாகனங்கள் (BOV) சப்ளை செய்தல் பணி. | ரூ.1,96,500/– |
| 2 | சுபா மெட்டல் இன்டஸ்ட்டிரிஸ்<br>அய்யப்பா தெரு,<br>சென்னை. | | ரூ.1,97,850/– |

**அலுவலக குறிப்பு:–**

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய ஒப்பந்ததாரர் CY Group of Company, என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேலும் பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1053 நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.31</u>**

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்று நோய் பரவல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் 65 நபர்கள் தனிமைப் படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரப்படுகின்றனர். மேலும் இவர்களின் செயல்பாடுகளை கண்காணித்திடவும் அவர்களின் குடியிருப்பு மற்றும் அவர்களின் குடியிருப்பு பகுதியை சுற்றிலும் கொரோனா வைரஸ் தடுப்பு கிருமி நாசினியை தினசரி தெளிக்கவும் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் உபயோக படுத்தியதை பாதுகாப்பான முறையில் கையாளவும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினசரி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த முறையில் 20 தூய்மை பணியாளர்கள் பணி அமர்த்தவும் பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் இதற்கென செலவீனம் பொது நிதியில் மேற்கொண்டதை மன்றம் ஏற்று பதிவு செய்யவும் தகவலுக்கு பொருள் வைக்கப்படுவது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1054 நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.32</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும், மற்றும் பேருந்து நிலையம் சமுதாய கூடங்கள், வணிக வளாங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் அறிவுரைகளின்படி தூய்மை பணியாளர்கள் பாதுகாப்புடன் பணியாற்றிடவும், கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் பாதுகாப்புடன் தூய்மை பணி ஆற்றிடவும் **பாதுகாப்பு கவச உடை (PPE)** இருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் – 1920 பிரிவு 15–ன் கீழ் உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டதையும் இதற்கென செலவீனம் பொதுநிதியில் மேற்கொண்டதையும் மன்றத்தின் பதிவுக்கும் மற்றும் தகவலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1055 நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.33</u>**

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரகுடில்களில் சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி பசுமை

உரக்குடில்களில் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை அரக்கோணம், நாவலூர் மற்றும் ரெட்ஹில்ஸ் ஆகிய பகுதிகளுக்கு தனியார் நிறுவனங்களில் திரவப்பொருளாக பயன்படுத்தப்படுவதால் ஏற்கனவே நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.என். செல்வராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த விதிகளின்படி அதே விலைவிகிதத்தின்படி நகராட்சி பகுதியிலிருந்து குப்பைகளை நாவலூர், அரக்கோணம் மற்றும் ரெட்ஹில்ஸ் ஆகிய பகுதிகளில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு எடுத்து செல்வதற்கும் மேலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.9.90/– இலட்சத்திற்கு பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2283/2019)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1056 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.34

2019 – 20ம் ஆண்டிற்கு திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தேக்கமடைந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பாக கையாள போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து பாதுகாப்பாக எடுத்துச்செல்ல கோணிப்பைகள் நாள் ஒன்றுக்கு 500 முதல் 750 தேவைப்படுவதாக இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் குறிப்பில் தெரிவித்துள்ளார் மேலும் தற்போது நகராட்சியில் கோணிப்பைகள் சப்ளை செய்யும் நிறுவனமான J.J எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் பணிக்கலாம் 31.03.2020 உடன் முடிவடைவதால் தற்போது கொரானா வைரஸ் தொற்றுநோய் பரவும் காலமாக உள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாததாலும் பொது சுகாதார பணிகள் அவசியத்தினை கருதி, பொது சுகாதாரப் பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்க போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் சப்ளை செய்யும் நிறுவனத்திற்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டத்தின் அடிப்படையில் போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கு ஏப்ரல் முதல் ஜூன் முடிய 3 மாத காலத்திற்கு அதேவிலை விகிதப்படி சப்ளை செய்யவும் அதற்கான பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1057 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.35

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 22.89 மெட்ரிக்டன் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத தன்மை என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மேலும் மாவட்ட ஆட்சி தலைவர் திருவள்ளூர், இணை இயக்குனர் பொது சுகாதாரம் திருவள்ளூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் ஆயியோரின் டெங்கு ஒழிப்பு ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சி பகுதி முழுவதும் டெங்கு நோய் ஒழிப்பு களப்பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சியில் விடிவெள்ளி ரூரல் டெவலப்மெண்ட் டிரஸ்ட் என்ற நிறுவனத்தின் மூலம் 35 (DBC) பணியாளர்கள் சப்ளை செய்ய இந்நகர் மன்ற

தீர்மான எண். 989 நாள். 30.11.2019. உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வரப்படுகிறது. மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 31.03.2020 உடன் முடிவடைவதாலும் , மேலும் தற்போது கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் அவசியம் சார்ந்த பணி என்பதாலும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் நடைமுறைகள் காலதாமதம் ஆகும் என்பதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதியும் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதின் அடிப்படையில் ஏப்ரல் , மே மற்றும் ஜுன் 2020 ஆக மூன்று மாத காலத்திற்கு 35 (DBC) பணியாளர்கள் சப்ளை செய்யும் ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்யவும் மேற்படி நிறுவனத்திற்கு அதே ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் அனுமதித்து பணி உத்திரவு வழங்கவும் இதற்கான செலவீனம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1058 நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.36

திருவேற்காடு நகராட்சி பகுதியிலுள்ள 18 வார்டுகளிலும் கொரனா வைரஸ் (COVID 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும் மற்றும் பொது சுகாதார பணிகள் பொதுமக்கள் நலன் கருதி பணியாற்றிடவும், பொதுமக்களிடையே கொரானா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான தளவாடப் பொருட்கள் போதிய அளவு இருப்பு வைக்க நகராட்சி நிர்வாகஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரைகளுக்குகேற்ப பொது சுகாதார தளவாடப் பொருட்கள் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து கொரனா வைரஸ் வேகமாக பரவி வருவதால் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதால் தளவாடப்பொருட்கள் விலைப்புள்ளி கோரி பெற்றிடவும், அதற்கான தொகை பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் பதிவு செய்யவும் மற்றும் தகவலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1059 நாள்.31.03.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.37

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும், கொரோனா வைரஸ் (COVID-19) தொற்று நோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் லைசால் என்னும் கிருமி நாசினியை இருபக்கமும் தெளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் மற்றும் துணை இயக்குநர், பொது சுகாதாரம், திருவள்ளூர் ஆகியோரின் அறிவுரைகளின்படி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள நகராட்சியில் போதிய அளவு ரைசால் இருப்பு இல்லாததாலும் பணிகளின் அவசர அவசியத்தை கருதியும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதாகும் என்பதாலும், தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து லைசால் என்னும் கிருமி நாசினி 1500 லிட்டர் வாங்கி பயன்படுத்திடவும் இதற்கென ஆகும் தோராய செலவினம் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் (COVID-19) தொற்று நோய் வேகமாக பரவி வருவதை தொடர்ந்து, இனி வரும் காலங்களில் கொரோனா வைரஸ் நோயினை

கட்டுப்படுத்தவும் லைசால் தேவையான அளவு வாங்கி பயன்படுத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.961/2020/எச்1)

**அலுவலக குறிப்பு :-**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1060** **நாள்.31.03.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

| | |
|---|---|
| 1 | 1024 |
| 2 | 1025 |
| 3 | 1026 |
| 4 | 1027 |
| 5 | 1028 |
| 6 | 1029 |
| 7 | 1030 |
| 8 | 1031 |
| 9 | 1032 |
| 10 | 1033 |
| 11 | 1034 |
| 12 | 1035 |
| 13 | 1036 |
| 14 | 1037 |
| 15 | 1038 |
| 16 | 1039 |
| 17 | 1040 |
| 18 | 1041 |
| 19 | 1042 |
| 20 | 1043 |
| 21 | 1044 |
| 22 | 1045 |
| 23 | 1046 |
| 24 | 1047 |
| 25 | 1048 |
| 26 | 1049 |
| 27 | 1050 |
| 28 | 1051 |
| 29 | 1052 |
| 30 | 1053 |
| 31 | 1054 |
| 32 | 1055 |
| 33 | 1056 |
| 34 | 1057 |
| 35 | 1058 |
| 36 | 1059 |
| 37 | 1060 |